தெரிவித்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, என்னுடைய அன்பு வேண்டுகோளாக, உடனடியாக அடுத்த நிதி ஆண்டில், தாமதமின்றி இதைச் செய்து தர முடியுமா? பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக அமைச்சர் பெருமகனாரிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே, தெரிவித்திருக்கிறேன். எல்லோரும் இப்படிப்பட்ட கோரிக்கைகளை வைத்து $1\frac{1}{2}$ கோடி, 2 கோடிக்குப் பாலம் கட்ட வேண்டுமென்று ஒவ்வொரு தொகுதிக்கும் கேட்கும்போது, இந்த அரசுக்கு இருக்கும் சங்கடங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இதை அமைச்சர் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும், உடனடியாகக் கட்ட வேண்டும், உறுதிமொழி தரவேண்டும் என்று சொல்லி ஏதோ வாய் மொழியாக சொல்லிவிட்டுப் போவதில் பிரயோசனமில்லை. அதைச் செயல்படுத்த வேண்டும். ஆகவே, இருக்கின்ற நிதி ஆதாரங்களை பொறுத்து—நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். போக்குவரத்து அதிகமுள்ள பகுதி என்று—முன்னுரிமை அடிப்படையில் எவ்வளவு விரைவாக நிதி ஒதுக்கீடு செய்ய முடியுமோ அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 291, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

291—

காஞ்சிபுரம் நகராட்சியில் வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

***10135.**—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகராட்சியின் வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் அதிகப்படுத்தப் படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1993 ஏப்ரல் 8]

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகரைப் பொறுத்தவரையில் முன்பு இருந்த மக்கள் தொகையைவிட இப்போது அதிக அளவில் இருக்கிறது. அங்கே ஏரியா அதிகமாக ஆகிவிட்ட காரணத்தாலும், மக்கள் தொகை அதிகமாக ஆகிவிட்ட காரணத்தாலும் அங்கே இப்போது இருக்கும் வார்டுகளை அதிகப்படுத்த முடியுமா என்று மாண்புமிகு அமைச்சரவர்களை பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகர சபையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே 36 ஆக இருந்த வார்டுகளை 42 ஆக உயர்த்திய காரணத்தாலே, மேற்கொண்டு உயர்த்துவதற்கு காரணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கா. ப. பட்டாபிராமன்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் அடுத்த மாதம் 7—5—1993 அன்று தன்னுடைய 100 ஆவது பிறந்த நாளைக் கொண்டாட இருக்கும் நடமாடும் தெய்வமான காஞ்சி பரமாச்சாரியார் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியார் ஸ்வாமிகள் வீற்றிருந்து அருளாசி நல்கிவரும் சங்கரமடம் இருக்கும் தெருவிற்கு 'சாலை வீதி' என்று பெயர் இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அந்த 'சாலை வீதி' என்கின்ற பெயரை மாற்றி 'பரமாச்சாரியார்' அவர்களின் பெயரைச் சூட்டுவதற்கு இந்த அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. அழகுதிருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி பற்றி தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரையையும் ஆலோசனையையும் பெற்று முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 292. திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.